# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்


## பாடம் 1: ஆயிரங்கால மனிதன்

**தானியேல் 2:1-49**

### நடந்த கதை . . .

பாபிலோன் சாம்ராஜ்யம் செல்வச்செழிப்பாக இருந்த காலம் அது. ஆனால், அதன் ராஜா நேபுகாத்நேச்சாரோ தன் படுக்கையில் குழப்பத்தோடு படுத்திருந்தான்.

'இந்தப் பொற்காலம் எப்போதும் நிலைத்திருக்குமா? எனக்குப் பிறகு இந்த ராஜ்யம் என்னவாகும்?' இப்படிப்பட்ட கேள்விகளோடு அவன் தூங்கச்சென்றான். தன் கனவில் அவன் பிரமாண்டமான, உலோக, மனித சிலை ஒன்றைப் பார்த்தான். இதற்கு முன்னால் இது போன்ற ஒரு சிலையை அவன் பார்த்தது இல்லை. தன்னுடைய போர்வையைத் தூக்கி எறிந்துவிட்டு, படுக்கையில் இருந்து எழும்பினான்.



தன் காவலர்களை அழைத்தான். "நம் நாட்டிலுள்ள குறிகாரர்களையும் ஜோஸ்யக்காரர்களையும் ஞானிகளையும் உடனே அழைத்துவாருங்கள்" என்று கட்டளையிட்டான். அப்படியே பாபிலோனின் குறிகாரர்களையும் ஜோஸ்யக்காரர்களையும் ஞானிகளையும் காவலர்கள் அழைத்து வந்தார்கள்.

ராஜா அவர்களிடம், "நான் ஒரு கனவு கண்டேன்; அந்தக் கனவை அறிய வேண்டுமென்று என் ஆவி கலங்கியிருக்கிறது" என்றான். தானி 2:3. ஏமாற்றுக்கார ஜோசியக்காரர்களில் ஒருவன் ராஜாவிடம், "கனவைச் சொல்லும், அர்த்தத்தைச் சொல்கிறோம்" என்றான்.

அரசனுக்குக் கனவு தெளிவாக மனதில் இல்லை. தேவனுடன் தங்களுக்கு நேரடித் தொடர்பு உண்டு என்று சொல்லிக் கொண்டவர்கள் இவர்கள். அந்தத் திறமை அவர்களுக்கு உண்மையிலேயே உண்டா என்று சோதித்துப் பார்த்து விட ராஜா முடிவுசெய்தான். "கனவையும் அர்த்தத்தையும் சொல்லுங்கள், நான் உங்களுக்குப் பரிசு தருவேன். சொல்லாவிட்டால் உங்களைக் கொன்றுவிடுவேன்" என்று மிரட்டினான்.

கனவைச் சொல்லும் திறமை தங்களுக்கு இல்லை என்று சூனியக்காரரும் ஜோசியரும் ஒத்துக்கொண்டார்கள். இந்த ஏமாற்றுக்காரர்கள்மேல் கோபமடைந்த ராஜா, பாபிலோனின் ஞானிகள் அனைவரையும் கொல்லுமாறு கட்டளையிட்டான். ஆனால், பாபிலோனில் தேவனுக்கு ஒருவர் இருந்தார். அவரால் இந்த ஆயிரங்கால மனிதனைப் பற்றிய கனவை விளக்கமுடியும். அவர் இதைக் கேள்விப்பட்டபோது என்ன செய்தார்? அதைப் பார்ப்போம்.

## ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1. பாபிலோனிய ராஜாவுக்கு ஆண்டவர் இந்தச் சொப்பனத்தை ஏன் கொடுத்தார்?**

**தானியேல் 2:28.** *________________ வெளிப்படுத்துகிற பரலோகத்தில் இருக்கிற தேவன் ________________ நாட்களில் சம்பவிப்பதை ராஜாவாகிய நேபுகாத்நேச்சாருக்குத் தெரிவித்திருக்கிறார்.*

**குறிப்பு:** தம் மக்களை நேரடியாகப் பாதிக்கக்கூடிய தேசங்களின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் பற்றி தேவன் இந்தப் பல உலோகச் சிலைக் கனவின் மூலம் வெளிப்படுத்தினார். வரலாற்றில் ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலான காலத்தின் சுருக்கமாக இந்தக் கனவு அமைந்தது.

**2. கனவையும் அதன் அர்த்தத்தையும் ராஜாவின் ஞானிகளால் சொல்லமுடியாமல் போனபோது, நேபுகாத்நேச்சார் என்ன கட்டளைகொடுத்தார்?**

**தானியேல் 2:12.** *ராஜா ... பாபிலோனில் இருக்கிற எல்லா ஞானிகளையும் ________________ கட்டளையிட்டான்.*

**குறிப்பு:** இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை தங்களுக்கு உண்டு என்று பாபிலோனின் ஜோசியக்காரரும் குறிகாரரும் இதுவரை சொல்லிவந்தார்கள். ராஜாவின் சொப்பனத்தை அவர்களால் சொல்ல முடியாமற்போனபோது, அவர்கள் ஏமாற்றுக்காரர்கள் என்பது வெளிப்பட்டது. ராஜாமட்டும் சொப்பனத்தைச் சொல்லியிருந்தால் ஏதாவது ஒரு விளக்கத்தைச் சொல்லியிருப்பார்கள். கோபமடைந்த நேபுகாத்நேச்சார் எல்லா ஞானிகளையும் கொல்லும்படிச் சொன்னார். அங்கே அப்போது இராதிருந்த ஞானிகளும் கொல்லப்பட இருந்தார்கள். அப்படி அங்கு வராதிருந்தவர்களில் தேவனுக்குப் பயப்படுகிற மனிதர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் தானியேல். அரசாங்க வேலைசெய்ய அவருக்குப் பயிற்சிகொடுத்திருந்தார்கள்.

**3. இந்த மரணச்சட்டத்தைப்பற்றி தானியேல் கேள்விப்பட்டபோது, அவர் ராஜாவிடம் என்ன அனுமதிகேட்டார்? தன் நண்பர்களிடம் என்ன சொன்னார்?**

**தானியேல் 2:16.** *தானியேல் ராஜாவினிடத்தில் போய், சொப்பனத்தின் ________________ ராஜாவுக்குக் காண்பிக்கும்படித் தனக்குத் ________________ விண்ணப்பம்பண்ணினான்.*

**தானியேல் 2:17,18.** *பின்பு தானியேல் தன் வீட்டுக்குப் போய், தானும் தன் தோழரும் பாபிலோனின் மற்ற ஞானிகளோடேகூட அழியாதபடிக்கு இந்த ________________ குறித்துப் பரலோகத்தின் தேவனைநோக்கி இரக்கம் கேட்கிறதற்காக, அனனியா, மீஷாவேல், அசரியா என்னும் தன்னுடைய தோழருக்கு இந்தக் காரியத்தை ________________.*

**குறிப்பு:** 'கால அவகாசம் கொடுங்கள். நான் சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும் சொல்லுகிறேன்' என்று நேபுகாத்நேச்சாரிடம் தானியேல் வேண்டுகோள் விடுத்தார். சொப்பனத்தை அறிந்துகொள்ளும் ஆவல் ராஜாவுக்கு இருந்ததால் தானியேலுக்கு அவர் அனுமதிகொடுத்தார். "ராஜாவின் சொப்பனத்தைச் சொல்லக்கூடிய ஒரே நபர் தேவன்தாம்; அவரிடம் நாம் ஜெபிப்போம்" என்று தானியேல் தன் நண்பர்களையும் அழைத்தார். அவர்கள் பரலோகத்தின் தேவனைநோக்கி ஜெபித்தார்கள்.

**4. தானியேலுக்குச் சொப்பனம் வெளிப்படுத்தப்பட்டபோது, அவர் யாரைப் புகழ்ந்து துதித்தார்?**

**தானியேல் 2:23,28.** *'என் பிதாக்களின் ________________, உம்மைத் துதித்துப் புகழுகிறேன்' என்றான். மறைபொருள்களை ________________ பரலோகத்தில் இருக்கிற ________________.*





**குறிப்பு:** ராஜ்யங்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் ஏதோ தாமாக நடப்பதுபோலவோ, மனிதர் விருப்பப்படி நடப்பதுபோலவோ தெரியலாம். ஆனால், தேவனுடைய குறுக்கீடு அங்கே இருக்கிறது என்பதை தானியேலின் ஜெபம் வெளிப்படுத்துகிறது. தேவனுக்குத் தெரியாத எதுவும், அவர் அனுமதிக்காத எதுவும் நிகழ்வது இல்லை. உலகில் நடக்கின்ற நிகழ்ச்சிகளை சில வேளைகளில் நம்மால் புரிந்துகொள்ளமுடிவதில்லை. ஆனால், தேவனுக்கு எல்லாம் தெரியும் என்பது நமக்கு ஆறுதலாக இருக்கிறது. தனக்குக் கனவை வெளிப்படுத்திய பரலோகத்தின் தேவனுக்கு தானியேல் தன் நன்றியைச் சொன்னார்.

**5. என்ன இரண்டு பொருட்களை ராஜா தன் சொப்பனத்தில் பார்த்ததாக தானியேல் சொன்னார்?**

**அ. தானியேல் 2:31.** *ராஜாவே, நீர் ஒரு ________________ ________________ கண்டீர்.*

**ஆ. தானியேல் 2:34.** *நீர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு ________ பெயர்ந்து உருண்டுவந்தது;*

**குறிப்பு:** ராஜா பார்த்த முதல் பொருள் ஒரு பெரிய சிலை. அதிலே வெவ்வேறு உலோகங்களில் சிலையின் உறுப்புகள் இருந்தன.

1. தலை **பொன்னால்** ஆனது.
2. மார்பும் புயமும் **வெள்ளியால்** ஆனவை.
3. வயிறும் தொடையும் **வெண்கலத்தால்** ஆனவை.
4. கால்கள் **இரும்பால்** ஆனது.
5. பாதங்கள் **இரும்பாலும் களிமண்ணாலும்** ஆனவை.

அதன்பிறகு, நேபுகாத்நேச்சார் ஒரு கல்லைப் பார்த்தார். அது கைகளால் பெயர்க்கப்படாத கல். இந்த விளக்கத்தை நேபுகாத்நேச்சாரிடம் தானியேல் சொன்னபோது, நேபுகாத்நேச்சார் மிகுந்த ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்திருப்பார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ராஜா கண்ட சொப்பனத்தை தானியேல் சரியாகச் சொல்லிவிட்டார். அதன் அர்த்தம் என்ன என்பதை அறிந்துகொள்ள ராஜா இப்போது ஆவலோடு காத்திருந்தார். கர்த்தர் தனக்கு வெளிப்படுத்தினபடியே அதன் அர்த்தத்தையும் தானியேல் சொன்னார். நாமும் அதைப் பார்க்கப்போகிறோம். வேத தீர்க்கதரிசனங்களை நாம் விளங்கிக்கொள்ள வேண்டுமென்றால், வேதாகமமே அதற்கு விளக்கம் சொல்லவேண்டும். அதனால், வேதாகமம் என்ன சொல்லுகிறதென்பதை இப்போது பார்க்கப்போகிறோம்.

**6. பொன்னான தலை எதைக் குறிக்கிறது?**

**தானியேல் 2:38.** *பொன்னான அந்தத் ________________ நீரே.*

**குறிப்பு:** பொன்னான தலை பாபிலோன் ராஜ்யம். ஒரு தேசத்தின் தலைவன் ராஜாதான்; அதனால், பொன்னான தலை நீரே என்று நேபுகாத்நேச்சாரைச் சுட்டிக்காட்டினார் தானியேல். கி.மு. 612 முதல் 539 வரை புதிய பாபிலோன் ஆட்சிசெய்தது. அதைப் பொன்னாலான தலை சுட்டிக்காட்டுகிறது. அது தானியேல் வாழ்ந்த காலம்தான்.

**7. பாபிலோனிய தேசம் நித்தியமாக நிலைத்து இருக்குமா?**

**தானியேல் 2:39.** *உமக்குப்பிறகு உமக்குக் ________________ வேறொரு ராஜ்யம் தோன்றும்.*

**குறிப்பு:** பாபிலோன் நித்திய காலமாக ஆட்சிசெய்யப்போவது இல்லை. பாபிலோனுக்குப்பிறகு ஒன்றுக்கொன்று கீழ்த்தரமான ராஜ்யங்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றும். கி.மு. 539 ஆம் ஆண்டில் கோரேஸ் ராஜாவின் தலைமையில் மேதிய–பெர்சிய சாம்ராஜ்யமானது பாபிலோனை அழித்துப்போட்டது. கி.மு. 539 முதல் 331 வரை மேதிய பெர்சியர்கள் அரசாண்டார்கள். மேதிய பெர்சியாவில் அந்தக் காலங்களில் வரியை வெள்ளியாகச் செலுத்த வேண்டுமென்பது கவனிக்கத்தக்கது.

## 8. மேதிய-பெர்சியாவுக்குப் பின்னர் வந்த ராஜ்யம் எந்த உலோகத்தால் சுட்டிக்காட்டப்படுகிறது?

**தானியேல் 2:39.** பூமியையெல்லாம் ஆண்டுகொள்ளும் ________________ மூன்றாம் ராஜ்யம் ஒன்று எழும்பும்.

**குறிப்பு:** கி.மு. 331 ஆம் ஆண்டு அர்பலாவில் நடந்த யுத்தத்தில் மேதிய–பெர்சியரை மகா அலெக்ஸாண்டர் தோற்கடித்தார். அப்போது, வெண்கலம் சுட்டிக்காட்டிய கிரேக்க ராஜ்யம் ஆட்சிக்கு வந்தது. அது கி. மு. 331 முதல் 168 வரை ஆட்சியில் இருந்தது. கிரேக்க வீரர்களின் கவசங்கள் வெண்கலத்தால் ஆனவை என்பது கவனிக்கத்தக்கது. முந்தைய உலோகத்தின் மதிப்பைவிட இது குறைவானதுதான். அதுபோல, கிரேக்க ராஜ்யமானது மேதிய–பெர்சிய ராஜ்யத்தைவிடக் கீழ்த்தரமானதாக இருந்தது.

## 9. நான்காவது ராஜ்யத்தைச் சுட்டிக்காட்டிய உலோகம் எது?

**தானியேல் 2:40.** நாலாவது ராஜ்யம் ________________ போல உரமாயிருக்கும்;

**குறிப்பு:** கி.மு.168 இல் கிரேக்கர்களை இரும்பு ரோமப்பேரரசு தோற்கடித்தது. கி.பி. 476 இல் ஆஸ்ட்ரகாத்துக்களால் ரோம் பிடிக்கப்படும்வரை ரோம் ஆட்சிசெய்தது. இயேசு கிறிஸ்து உலகத்தில் மனிதராகப் பிறந்தபோது, ரோம அரசாங்கம் உலகை ஆட்சிசெய்தது. தீர்க்க தரிசனம் சொன்னபடியே இந்த நான்கு பேரரசுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் நிகழ்ந்தன.

1) *பாபிலோன் சாம்ராஜ்யம்*
2) *மேதிய-பெர்சியா சாம்ராஜ்யம்*
3) *கிரேக்க சாம்ராஜ்யம்*
4) *ரோம சாம்ராஜ்யம்*

ஆகிய நான்கு பேரரசுகளைப்பற்றியும் வரலாற்றுப் புத்தகங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

## 10. ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு என்ன நிகழும்?

**தானியேல் 2:41,42.** அந்த ராஜ்யம் ________________. கால்விரல்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது என்னவென்றால், அந்த ராஜ்யம் ஒரு பங்கு உரமும் ஒரு பங்கு நெரிசலுமாயிருக்கும்.

**குறிப்பு:** கி.பி. 476இல் ரோமப்பேரரசு நொறுங்க ஆரம்பித்தபிறகு, அந்த இடத்தில் வேறொரு பேரரசு தோன்றவில்லை. தானியேல் முன்னுரைத்தபடியே ரோமப் பேரரசு சிதறுண்டது. காட்டுமிராண்டி களான ஜாதிகள் அவர்களை வெற்றிகொண்டார்கள். அவற்றில் பத்து ராஜ்யங்கள் ஐரோப்பா வாக மலர்ந்தன. அவையாவன:

| | |
|---|---|
| 1 ஆஸ்ட்ரகாத் | 2 விஸிகாத் |
| 3 ஃப்ரங்க்ஸ் | 4 வாண்டல் |
| 5 அலமேனியன் | 6 ஸ்வீவி |
| 7 அங்லோ–சாக்ஸன் | 8 ஹெருளி |
| 9 லம்பார்ட் | 10 பர்கண்டியன் |

அவற்றில் ஏழு ராஜ்யங்கள் இன்றும் இருக்கின்றன.
அங்லோ–சாக்ஸன்ஸ் என்பவர்கள்தாம் ஆங்கிலேயர்கள்;
ஃபராங் என்பவர்கள்தாம் ஃப்ரெஞ்ச்; அலமேனியன்தான் ஜெர்மானியர்கள்;
லம்பார்ட் என்பவர்கள்தாம் இத்தாலியர்கள்.

## 11. அந்தப் பத்து ராஜ்யங்களும் ஒன்றாக இணையுமா?

**தானியேல் 2:43.** அவர்கள் மற்ற மனுஷரோடே சம்பந்தங்கலப்பார்கள்; ஆகிலும் இதோ, களிமண்ணோடே இரும்பு கலவாததுபோல அவர்கள் ஒருவரோடு ஒருவர் ___________ ______________________________.

**குறிப்பு:** திருமணம், அரசியல் ஒப்பந்தங்கள் போன்றவற்றின் மூலமாக ஐரோப்பியக் கண்டத்தை ஒன்றுபடுத்துவதற்கு பலரும் முயற்சிசெய்திருக்கிறார்கள். மகா சார்லஸ், நெப்போலியன், கெய்ஸர் வில்லியம், முசோலினி, ஹிட்லர் போன்றவர்கள் ஐரோப்பியப் பேரரசை நிறுவுவதற்கு முயன்றார்கள். ஆனால், அப்படிப்பட்ட அரசு தோன்றவே இல்லை. அப்படிப்பட்ட அரசு தோன்ற முடியாது என்றுதான் வேதாகமம் சொல்கிறது. உலகளாவிய மதம் ஒன்றைத் தோற்றுவிப்பதற்கு முயற்சியைச் செய்வார்கள் என்று வெளிப்படுத்தல்13 இல் பார்க்கிறோம். ஆனால், இந்த ராஜ்யங் கள் பிரிந்துதான் கிடக்குமென்று தானியேல் தீர்க்கதரிசனம் தெளிவாகச் சொல்கிறது.



## 12. கடைசி ராஜ்யத்தை நிறுவப்போவது யார்?

**தானியேல் 2:44.** அந்த ராஜாக்களின் நாட்களிலே, ______________________ __________ என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்.

**குறிப்பு:** உலகளாவிய அடுத்த ராஜ்யம் பரலோக ராஜ்யம் ஆகும். இதைப்பற்றி மத்தேயு 25:31–34 இல் வாசிக்கலாம்.

## 13. உலக ராஜ்யங்களை அந்தக் கல் என்ன செய்தது?

**தானியேல் 2:34,35.** கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டு வந்தது; அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் ____________, அவைகளை நொறுக்கிப்போட்டது. சிலையை ____________ கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியையெல்லாம் நிரப்பிற்று.

**குறிப்பு:** கைகளால் பெயர்க்கப்படாத கல் என்பது தேவராஜ்யம் ஆகும். உலக ராஜ்யங்களின் கூட்டாட்சி அல்ல அது. உலக அரசுகள் அனைத்தும் மாற்றப்பட்டு, உருவாகப்போகிற ராஜ்யம் அது. வெளி 21:1. இயேசு கிறிஸ்து மீண்டும் உலகத்திற்கு வரும்போது, பூமியின் ராஜ்யங்களை எல்லாம் அழித்து, நித்திய ராஜ்யத்தை நிறுவப்போகிறார். தானி 2:44. பரவசமூட்டும் செய்தி அல்லவா அது! இயேசு கிறிஸ்து மீண்டும் வரப்போகிறார். அந்த நிகழ்ச்சியைநோக்கி வரலாறு நகர்ந்துகொண்டு இருக்கிறது. நித்திய நீதியுள்ள ராஜ்யத்தை தேவகுமாரன் இங்கே நிறுவப் போகிறார். எருசலேமை முற்றுகையிட்டு, அதன் ஆலயத்தைக் கொள்ளையிட்டபோது, மெய் தேவனை வென்றுவிட்டதாக நேபுகாத்நேச்சார் நினைத்திருக்கலாம். தானி 1:1,2. ஆனால், தேவனே சகலரையும் ஆளுகிறார் என்பது நேபுகாத்நேச்சாருக்குக் காட்டப் பட்டது. உலகின் நிகழ்ச்சிகள் அவரின் கட்டுப்பாட்டிற்குள்தான் இருக்கின்றன. பாபிலோனும், மேதிய–பெர்சியா வும், கிரேக்கமும், ரோமும், ரோம சாம்ராஜ்யத்தின் பத்துப் பிரிவுகளும் தேவ அதிகாரத்தைக் கைப்பற்றி, தேவ மக்களை அழிக்க முயற்சித்திருக்கலாம். ஆனால், இந்த உலக ராஜ்யங்கள் அனைத்தும் அழிந்துபோகும்; இறுதியில் தேவனே வெற்றிபெறுவார். மாபெரும் போராட்டத்தில் வெற்றி அவருக்கே! தேவனுக்கு ஸ்தோத்திரம்.

## 14. சொப்பனத்திற்கு தானியேல் விளக்கம் சொன்னபிறகு, ஆண்டவரைப் பற்றி நேபுகாத்நேச்சார் என்ன சொன்னான்?

**தானியேல் 2:47.** ராஜா தானியேலை நோக்கி: "நீ இந்த மறைபொருளை வெளிப் படுத்தினபடியினால், மெய்யாய் உங்கள் ______________________________ _______ னும், ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார்".

**குறிப்பு:** உலக நிகழ்ச்சிகள் தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றன என்பதை நேபுகாத் நேச்சார் உணர்ந்துகொண்டான். பாபிலோனியரின் கடவுள்களைவிட இஸ்ரவேலின் தேவன் பெரியவர் என்பதை நேபுகாத்நேச்சார் ஒத்துக்கொண்டான். எப்படிப்பட்ட மாற்றம் அது! தானி யேலும் அவருடைய நண்பர்களும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் இருந்ததினால், கைதி களாக அந்தத் தேசத்திற்கு வந்த அவர்கள், ராஜ்யத்தின் பெரிய பதவிகளில் அமர்த்தப்பட்டார் கள். தானி 2:48,49. தம்மைக் கனப்படுத்துகிறவர்களை தேவன் நிச்சயமாகவே கனப்படுத்து கிறார். 1சாமு 2:30.

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

உலகின் நிகழ்ச்சிகள் அனைத்தும் தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கின்றன என்பதை உணர்ந்து, உங்களுடைய வாழ்க்கையை அவருடைய கட்டுப்பாட்டிற்குள்விட ஆயத்தமாக இருக்கிறீர்களா?

**பதில்:** ________________________________________________



# துணைப்பகுதி

மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவ்ல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.



**தங்கம்** = பாபிலோன்
பொன்னாக இருந்த தலையானது பாபிலோனைச் சுட்டிக்காட்டுகிறது. கி.மு. 612–539 இல் இது பேரரசாக இருந்தது.

**வெள்ளி** = மேதிய பெர்சியா
வெள்ளியாக இருந்த மார்பு மேதிய–பெர்சியாவைச் சுட்டிக்காட்டுகிறது. 539–331 இல் இது பேரரசாக இருந்தது.

**வெண்கலம்** = கிரேக்கம்
வெண்கல வயிறும் தொடைகளும் கிரேக்கத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. கி.மு. 331–168 இல் இது பேரரசாக இருந்தது.

**இரும்பு** = ரோம்
இரும்புக் கால்கள் ரோமப் பேரரசைச் சுட்டிக்காட்டு கின்றன. கி.மு. 168–கி.பி. 476 இல் இது பேரரசாக இருந்தது.

**இரும்பும் களிமண்ணும்** = பிரிந்து கிடக்கும் சாம்ராஜ்யம்
பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாக இருந்தது; பேரரசு சிதைந்துபோகுமென்பதை இது காட்டுகிறது. அவை ஒன்றோடு ஒன்று சேராது. கி.பி. 476 க்குப்பிறகு, உலகை ஒரே ஆட்சியின்கீழ் கொண்டுவர எவராலும் முடியவில்லை. கிறிஸ்துவின் வருகைவரை அது அப்படியேதான் இருக்கப்போகிறது.

**கல்** = கிறிஸ்துவின் நித்திய ராஜ்யம், அவருடைய வார்த்தை, அவருடைய நியாயப்பிரமாணம்

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com